# புத்தர் பிறந்த இடத்தில் இலங்கை கவர்னர் ஜெனரல்

Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 329
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 11 றஜப். 23 சனிக்கிழமை [28-10-67]

புதுடில்லி, அக். 27

இலங்கை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ தமது மனைவியுடன் இன்று புத்தர் பெருமான் பிறந்த இடமான லும்பினிக்கு விஜயம் செய்தார்.

கோராப்பூரிலிருந்து கவர்னர் ஜெனரலும் அவரது கோஷ்டியினரும் லும்பினிக்குப் போய்ச்சேர்ந்தனர்.

நேம்பால் ராஜ்யத்தில் இந்த புனித ஸ்தலம் இருக்கின்றது. இலங்கை கவர்னர் ஜெனரலும் அவரது மனைவியும் வந்துசேர்ந்த போது அந்த ராஜ்யத்தின் பிரதமரும் பிரமுகர்களும் வரவேற்றனர். கவர்னர் ஜெனரல் லும்பினி தேவாலயத்துக்கும் புத்தவிகாரைகளுக்கும் சென்று அஞ்சலி செய்தார்.

# எஸ். ஜே. வி. வீட்டின் முன் 100 பேர் சத்தியாக்கிரகம்

## அரசாங்கத்தை விட்டு வெளியேறக் கோரிக்கை

### திருக்கோணமலை துறைமுகம் தேசிய மயமானதின் எதிரொலி

கொழும்பு, வெள்ளி

திருகோணமலை துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டதை ஆட்சேபித்து தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வீட்டின் முன்னால் இன்று காலையில் சுமார் 100 பேர் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்தனர்.

இலங்கைத் துறைமுக தொழிலாளர் கழகத்தின் தலைவர் ஏ. ரி. டேவிட் காரியதரிசி திரு. ஈழத்துநாதன் பொருளாளர் திரு. ரி. ராஜரட்ணம் திருமலை நகரசபை அங்கத்தவர் ஆகியவர்களின் தலைமையில் இந்த சத்தியாக்கிரகம் நடைபெறுகின்றது.

தமிழரசுக் கட்சி ஆட்சேபம் தெரிவித்திருந்த போதிலும் அரசாங்கம் திருகோணமலைத்துறைமுகத்தைதேசிய மயமாக்கிவிட்டதின் காரணமாக தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேற வேண்டும் என்று இவர்கள் கோரியுள்ளனர்.

இதற்கிடையில் தமிழரசுத் தலைவர்கள் பிரதம மந்திரியை சந்தித்து இது விஷ

[6-ம் பக்கம் பார்க்க]

## யார் அந்தப் பெண் ?

### பொலிசாருக்கு ஒரு பிரச்னை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் ஒன்றின் அறைக்குள் இறந்து கிடந்த நாரன்பிட்டியாவைச் சேர்ந்த தர்மதாசாவின் சேட்பைக்குள் இருந்த பெண்ணின் புகைப்படம் யாருடையதென்பதைக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இம் மரணம் சம்பந்தமாக திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. என். இராச

[6-ம்பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணம் ஜவுளிக்கடையில் பொலிஸார் வேட்டை

# ரூ. 75,000 பொருட்கள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், சனி

சுமார் 75,000ரூபா பெறுமதியான ஜவுளி வகைகளை கள்ளக்கடத்தல் பொருட்களென்றசந்தேகத்தின்பேரில் பொலிசார் கைப்பற்றினர். யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியிலுள்ள ஜவுளிக்கடை ஒன்றிலிருந்தே பொலிஸார் இவற்றைக் கைப்பற்றினராம்,

பொலிசாருக்குக் கிடைத்த [illegible] சப் இன்ஸ்பெக்டர் சிறிவர்த்தன தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரே சம்பந்தப்பட்ட கடையிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு இப்பொருள்களைக் கண்டுபிடித்தனர். விலையுயர்ந்த வெளி நாட்டுச் சேலைகள், சாரங்கள் இங்கிருந்து கைப்பற்றப்பட்டு சுங்க இலாகாவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின்பேரில் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். [ந. நி.]

## முதல் நாள் 75 ஆயிரம்

யாழ்ப்பாணம், சனி

நேற்றுமுன்தினம் திறக்கப்பட்ட 'லக்சல' விற்பனை நிலையத்தில் முதல் நாளன்றேசுமார் 75000 ரூபாவுக்கு விற்பனை நடைபெற்றதாகத் தெரிகின்றது.

முதல்நாளன்றே மிகக் கூடுதலான வியாபாரம் நடைபெற்றதாக 'லக்சல' பிரதம ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

(ந. நி.)

1. யானை மார்க் நம்பர் 1 சீமென்ஸ

ஓடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சீமென்ஸ்.

2. சீமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணையும் ஆமணக்கெண்ணை கூந்தல் வளர்ம் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சீமென்ஸ் புத்தராஜா தைலம்

தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநீசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஔஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

**சீமென்ஸ் பற்பொடி:** தினமும் சீமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு. நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும். நச்சுக் கலப்பில்லாதது.

ஒரு பாக்கெட் 60 சதம்,

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று
இதுதான் நிவாரணம்:

**சீமென்ஸ் கடுக்காய் குளிகைகள்**

இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ. 1 / 20, தபால் செலவு 60 சதம்.

**சீமென்ஸ் ஓடிகொலோன்**
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-25
2 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-25

**சீமென்ஸ் ஆமணக்கெண்ணை கூந்தல தைலம்**
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-50

**சீமென்ஸ் செவ்விளநீர் தேங்காயெண்ணை கூந்தல் தைலம்**
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-10
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00

**சீமென்ஸ் பற்பொடி**
1 பாக்கெட் -/60 சதம்

**சீமென்ஸ கடுக்காய் குளிகைகள்**
100 குளிகை போத்தல் ரூ. 3-50
250 குளிகை போத்தல் ரூ. 8-50
500 குளிகை போத்தல் ரூ. 15-00

**சீமென்ஸ புத்தராஜ தைலம்**
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-35
6 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-25

வியாபாரிகளுக்கு விசேஷ சலுகைகள்

**சீமென் பிரதர்ஸ்,**
234, 5-ம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சரணாகதி என்பது, நடப்பதெல்லாம் அவன் செயல் என்றும், எல்லாம் நல்லதற்கே என்றும் கொள்ளுவது தான். இவ்வித மனப்பான்மை கொண்டவருக்கு துக்கமேது?

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵ ஐப்பசிமீ 11வ (28-10-67)

## அழிவைத்தடுக்க வழி

தென்னிலங்கையில் தொடர்ந்து பெய்த கடும் மழை விட்டுக்கொடுத்துள்ளது. வெள்ளமும் சிறிது சிறிதாக வடியத் தொடங்கியிருக்கிறது. வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியான மக்கள் மீண்டும் தங்கள் பகுதிகளுக்குச் சென்று புதிதாக தங்கள் வாழ்வைத்தொடங்க முயற்சிசெய்யத் தொடங்குகின்றனர். களனி ஆற்றின் சீற்றமும் சிலாபம் பகுதியில் வீசிய புயற்காற்றும் வெள்ளமும் நூற்றுக்குமேற்பட்ட உயிரைப் பலிவாங்கியதுடன் பயிர்களுக்கும்விலை பொருள்களுக்கும் பெரும் சேதம்ஏற்படுத்தியுள்ளது. இயற்கையின் சீற்றத்தினுல் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களைத் தவிர்ப்பது சுலபமல்ல. ஆயினும் வருடாவருடம் களனியும் மகாவலியும்பெருக்கெடுப்பதும் மக்கள் பலர் வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாக நிற்பதும் அவர்களுக்கு சமூக சேவை இலாகா நிவாரண உதவி அளிப்பதும் வழமையான விஷயம்

களனிப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெரும் சேதம் ஏற்படாமல் தடுப்பதற்கு காணி நீர்ப்பாசன அமைச்சு ஒரு திட்டத்தைத் தயாரித்திருப்பதாகவும் இதை அமுல்நடத்துவதற்குநாற்பது கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இத்திட்டத்தின்படி பள்ளத்தைநோக்கிப்பாயும் கங்கையைகிளைபிரித்து குளங்களில் தேக்கிவைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளதாம்.

களனிகங்கை நீரையும் மகாவலிகங்கை நீரையும் வானத்தை நம்பியிருக்கும் வரண்ட பிரதேசங்களுக்குத் திருப்பிவிட்டு விவசாயத்துக்கு அவற்றின் நீரைப் பயன்படுத்தவும் இதே சமயம் இவற்றிலிருந்து நீர்மின்சாரம் உற்பத்தி செய்யவும் சில வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டு நிபுணர்கள் சிலர் பல நோக்குத்திட்டங்கள் தயாரித்துச்சமர்ப்பித்தனர். இத்திட்டங்களைச் செயல்படுத்த வெளிநாடுகள் சில பொருளாதார, தொழில் நுட்ப உதவி அளிக்க முன்வந்துள்ளதாகவும் கூறப்பட்டது. இந்தியாவில்பாக்ராநங்கல் அணைத்திட்டமும் எகிப்தில் அஸ்வான் அணைத்திட்டமும் வெற்றிகரமாகநிறைவேற்றபெற்றிருக்கையில இலங்கையில களனி கங்கையையும் மகாவலி கங்கையையும் பல்வேறு பயனுள்ள வழிகளில் உபயோகப்படுத்துவது விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் முன்னேற்றம் பெற்றுள்ள இக்காலத்தில் முடியாத காரியமல்ல. வருடா வருடம் ஏற்படும் வெள்ளச் சேதத்துக்கு அளிக்கப்படும் நிவாரண உதவி நிதியைக் கொண்டுகூட இத்திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியுமெனக் கூறலாம்.

களனி கங்கையை ஒரு புறமாகவும் மகாவலி கங்கையை வடக்கேயும் திசைதிருப்பும் திட்டத்தை செயல்படுத்தினுல் வரண்ட பிரதேசங்களிலுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படலாம். இதே சமயம் இத்திட்டத்தினுல் ஏற்படக்கூடிய நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்திசெய்யலாம். மின்சாரம் சிறிய பெரிய கைத்தொழில்கள் இங்கு உருவாகவும் விருத்தியடையவும் பயன்படும். களனி, மகாவலிகங்கைகளின் பலநோக்கத்திட்டங்களை விரைவில் நிறைவேற்றினுல் அடிக்கடி ஏற்படும் சேதங்களைத் தடுப்பதுடன் நாடும் விவசாயத்திலும் கைத்தொழிலில் பெரும் முன்னேற்றம்பெறும்.

## இன்றைய பலன்

[28-10-67]

சனிக்கிழமை

[ஐப்பசி மாதம் 11வ]

நட்சத்திரம்- மகம் பி. இரவு 2-40மேல்பூரம். திதி - தசமி இரவு 10-34 மேல் ஏகாதசி.

சுபநேரம்-3-02 - 4-32.

ராகுகாலம்- 9-02—10-32.

மேஷம்: பிதாவழிப் பொருள் பெருமையும் சேரும்.

ரிஷபம்: வியாபார நஷ்டம் வேண்டுவது நிதானம்.

மிதுனம்: பூமியால் லாபம், புதுமனைநினைப்பு.

கடகம்: உதவிக்குவிரைவீர், உபத்திரவமுமுண்டு.

சிங்கம்: ஆடம்பரப் பிரியம், பொருள் விரயம்.

கன்னி: காரிய சித்தி, கல்விச் சிறப்பு.

துலாம்: பம்பரம்போல் சுழன்றுலும்பயன்குறைவுதான்.

விருச்சிகம்: காதல்சிரிக்கும் கடமை தடுக்கும்.

தனுசு: புதல்வர்கள் உதவி, பூரண அமைதி.

மகரம்: உள்வீட்டில் பூசல், உறவில் வெடிப்பு.

கும்பம்: இல்லறச் சிறப்பு. இனியவை நடக்கும்.

மீனம்: தாமத புத்தி, தவறுகள் நடக்கும்.

— சோதிடக் கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

## சமாதானமுடிவுக்கு எம்.பி. வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

சங்கானையில் நடந்த சமாதான மகாநாட்டின் முடிவுகளை வரவேற்பதாகவும், மீண்டும், அங்கு இரு சமூகத்தவரிடையும்ஒற்றுமைநிலவ வேண்டுமென்றும், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், தெரிவித்துள்ளார் தவிர்க்க முடியாத காரணத்தால் சமாதான மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை யென்றும் எம். பி. தெரிவித்தார்

சங்கானையில் நிறுவப்பட்ட சமாதான கமிட்டியின் முதல் கூட்டத்தில், வட்டுக்கோட்டை எம். பி. யும், சங்கானை பட்டினசபை தலைவரும், பொலிஸ் அதிபரும் கலந்துகொள்வார்கள். இம்மூவரும், சமாதான கமிட்டி அங்கத்தவர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

# ‘கலைத் தெய்வத்தில் மாற்றம் வேண்டாம்’

## சைவ இளைஞர் மன்றம் ஆணையாளருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், சனி

''நாகரீகம் முதிர்ந்த மேற்கு நாடுகளில் கலைக்கென ஒரு தெய்வம் அமைத்து வழிபடுகிருர்கள். ஆனுல் யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய முன்றலில் தமிழனின் கலைத் தெய்வமான சரஸ்வதி சிலையை அமைத்து பின் அதன் அமைப்பைமாற்ற முயற்சித்தது சைவமக்களின் மனதைப்புண்படுத்தி வேதனைக்குள்ளாக்கி விட்டது''.

யாழ்ப்பாணம் வட மாநிலச் சைவ இளைஞர்மாமன்றம் யாழ்ப்பண மாநகர சபை ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், பொதுசன நூல் நிலைய முன்றலில் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலையில் சிலரின் ஆட்சேபத்தைத் தொடர்ந்து மாற்றங்கள் செய்தது சம்பந்தமாக ஆட்சேபம் தெரிவித்து எழுதப்பட்டுள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுசன நூல் நிலைய முன்றலில்சரஸ்வதி சிலையை அமைப்பதற்கு முன் தாங்கள் அதை அமைப்பது சரியா என்பதை பரிசீலனை செய்திருக்க வேண்டும். அதைவிடுத்து சைவ மக்களின் கல்வித் தெய்வம் சரஸ்வதி சிலையை அமைத்து பின் மாற்றியது ஏன் எனத் தெரியவில்லை.

தைப்பொங்கல், நவராத்திரி என்பன தமிழன் திருநாளாகும். அது சமய அடிப்படையில் இல்லாமலும் பிற தமிழ் மக்களாலும் கொண்டாடப்பட்டு வருகின்ற திருநாளாகும் ஆங்கிலம் கிறீஸ்தவ, சிங்களம்-பௌத்தம், அரபு - மொழி முஸ்லீம் இடையே இருக்கும் அதே ஒற்றுமை தமிழ் சைவம் இரண்டிற்கும் உடல் உயிராக அமைந்துள்ளது.

சைவமக்களின் வேண்டுகோளை செவிசாய்ந்து தமிழ்த் தெய்வம் சரஸ்வதி சிலையை மீண்டும் வைப்பதின் மூலம் தமிழன் பெருமையை தங்கள் மொழிப்பற்றையும் தமிழ்அன்னைக்கு செலுத்துவீர்களென நம்புகிறேம்.

இக்கடிதத்தின் பிரதிகள் ஸ்தலஸ்தாபன அமைச்சர் யாழ்ப்பாணம் எம். பி. ஆகியோருக்கும் ஸைவபரிபாலன சபைக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# ‘தேசிய ரீதியில் நீரியல் ஆராய்ச்சி’

புன்னலைக்கட்டுவன், வெள்

''நீர்ப்பாசன இலாகாவின் அறிக்கைப்படி நம் நாட்டு நிலத்தின் கீழ் ஏராளமாக நன்னீர் உள்ளதென்றும், அது பயன்படுத்தப்படவில்லையென்றும் தெரிகிறது. தொண்டமனுற்று ஆராய்ச்சி மட்டுமன்றி, தேசிய ரீதியில் பல இடங்களிலும் நீரியல் ஆராய்ச்சி நடாத்த எமது சங்கம் முன்வந்துள்ளது.''

இவ்வாறு, வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் செயலாளர் திரு. வை. சுந்தரலிங்கம் தமது அறிக்கையிற் குறிப்பிட்டார். தலைவர் திரு. ஜே. எஸ். அரியரத்தினத்தின் தலைமையில் யாழ். மத்திய கல்லூரியில் நடபெற்ற இக் கூட்டத்தில், அவர் தொடர்ந்து கூறியதாவது:

''செல்வந்தரும், விஞ்ஞான ஆசிரியரும் இவ்வித ஆக்கபூர்வமான முயற்சிகளுக்குக் கட்டாயம் ஆதரவளிப்பர். இவ்வித ஆராய்ச்சிகள் மூலமே விஞ்ஞான போதனையை மாணவருக்குக் கருத்து நிறைந்தவொன்ருகக் காட்டலாம்.''

புதுவருட உத்தியோகத்தர் தெரிவில் திரு. ரி. புத்திரசிங்கம் தலைவராகவும், திரு. வை. சுந்தரலிங்கம் செயலாளராகவும், திரு கே. செல்வ விநாயகம் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# ‘குழந்தைகள் நல்வாழ்வில் எதிர்காலம் தங்கியுள்ளது’

யாழ்ப்பாணம், சனி

'குழந்தைகளின் வளர்ச்சியிலும், அவர்களது ஒழுக்கங்களைக் கண்காணிப்பதிலும் அவர்களது பெற்றோர்கள் காட்டும் அக்கறையிலும் பார்க்க கூடுதலான அக்கறையை இன்று சமுதாயமும் அரசாங்கமும் எடுக்கத் தொடங்கியுள்ளது, ஏனென்ருல் குழந்தைகள் தான் எமதுநாட்டின் வருங்காலப் பிரஜைகள். இவர்கள் ஒவ்வொருவரதும் அயராத முயற்சியில்தான் எமதுநாட்டின் பொருளாதார வளர்ச்சியே தங்கியுள்ளது. இதற்காக அரசாங்கம் இன்று நாட்டின் பல பகுதிகளிலும் பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் பாலர் விடுதிகளையும், குழந்தைகள் வளர்ப்பு நிலையங்களையும் அமைத்துவருகின்றது.''

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் நடைபெற்ற நீர்வேலி பாலர் பகல் விடுதி சிறுவர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டகோப்பாய் எம்.பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை பேசுகையில் தெரிவித்தார்.

கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி அதிபர் திரு. ஆர். கே. சண்முகநாதன் இவ்வைபவத்துக்குத் தலைமைவகித்தார். திரு. சு. வீராசதுரை வரவேற்புரை நிகழ்த்தினுர் மேற்படி விடுதி பாலர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. திரு. மயிலுநன்றி தெரிவித்துப் பேசினுர்.

(ந. நி.)

## நாட்டிலும் நகரிலும்

பாராளுமன்றம் என்று அழைக்கக்கூடிய உலகப் பேரவையான ஐக்கிய நாடுகள்சபையின் பொதுக்காரியதரிசி யூ தாண்ட் சமீபத்தில் வெளியிட்ட ஓர் அறிக்கையில், இப்பூவுலகிலுள்ள 85 நாடுகளில் 75இல் ஆங்கிலம் ஓர் அந்நிய மொழியாகக் கற்பிக்கப்படுகிறதென்றும் 40 நாடுகளில் அதுகட்டாயபாடமாகஇருக்கிறதென்றும் தெரிவித்திருப்பதைப் பார்க்க இங்குள்ள சிலருக்கு ஆச்சரியமாயிருக்கலாம்.

நாம் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் ஆங்கிலம் ஓர் உலகமொழியாக இன்று விளங்குகிறதென்ற உண்மையை மறுக்கலாகாது.

ஆங்கிலத்துக்கு அடுத்தபடியாக பிரெஞ்சு மொழி அதிகமாக உபயோகிக்கப்படுகிறதென்றும் யூ தாண்ட் கூறுகிருர்.

ஐக்கிய நாடுகள் சபைக் காரியாலயத்தில் வேலை பார்ப்பவர்களின் தாய் மொழி நூற்றுக்கு மேற்பட்டதாயிருந்தும் அவர்களில் பெரும்பாலார் ஆங்கிலத்தையே உபயோகிக்கின்றனர்.

ஆங்கில மொழியையும், பிரெஞ்சு மொழியையும் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள்கூடப் பெரும்பாலும் ஆங்கிலத்தையே உபயோகிக்கிருர்கள்.

உலகின் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் ஒருவரோடொருவர் ஆங்கிலத்தில் தொடர்பு வைத்துக் கொள்வதனுல் தான் ஆங்கிலத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கிடைத்துள்ளதென்றும் யூ தாண்ட் கூறுகிருர்.

ஆங்கிலம் இன்னும் பல வருடங்களுக்கு உலக மொழியாக ஆட்சி செலுத்தப்போகிறதென்பதை பரந்த நோக்குள்ள எவரும் ஒப்புக்கொள்வார்கள். அம்மொழியைக் கற்பதால் நமக்கு நன்மையேயன்றி ஒருபோதும் தின்மை ஏற்படாது.

ஃ ஃ ஃ

பறக்கும் தட்டுகளின் பிராந்தி பல வருடங்களுக்குப் பின் இப்பொழுது சில காலமாக உலகெங்கும் தோன்றியிருக்கிறது.

சென்ற புதன்கிழமை சில பொலிஸ்காரரும், ஒரு விமானியும் இரவு நேரத்தில் பல விசித்திரமான வஸ்துக்களைக் கண்டார்களாம். இவற்றில் ஒன்று ஒளி சிதறும் சிலுவை உருவத்தில் இருந்ததாம்.

இவ்வஸ்துக்கள் எங்கிருந்து வருகின்றன.? வேருரு கிரகத்திலோ நட்சத்திரத்திலோ இருந்து வருகின்றனவா அல்லது உலகிலுள்ள நாடுகளில் ஏதோ ஒன்று தான் இந்த வேடிக்கையைக் காட்டுகின்றதோ?

பூமியிலிருந்து சந்திரனுக்கும், சுக்கிரனுக்கும், செவ்வாய்க்கும் ருெக்கட்டுகளையும், ஏவுகணைகளையும், செய்மதிகளையும் அனுப்புகின்ருேம். பிரபஞ்சத்தில் எத்தனை எத்தனையோ நட்சத்திரங்களும்கிரகமண்டலங்களும் வலம்வருகின்றன. இவற்றில் ஏதாவதொன்றில் நம்மைப் போல அல்லது நம்மைவிட மேலான ஒரு நாகரிகம் இருக்கமுடியாதா? அங்கிருந்து அவர்களும், நம்மைப் போல, நமது பூமியைப் பற்றி ஆராய்வதற்கு ஏவாயுதங்களை அனுப்பலாமல்லவா?

[4-ம் கலம் பார்க்க]

[4ம் கலத் தொடர்ச்சி]

பறக்கும் தட்டுகளைப் பற்றி வான சாஸ்திரிகளைக் கேட்டபோது, அவர்களுக்கு வழக்கமான ஐயுறவுடன், 'சீ, சீ இதெல்லாம் சுத்த மாயை. இந்நாட்களில் மிகவும் பிரகாசத்துடன் ஜொலிக்கும் சுக்கிரனைக் கண்டுவிட்டுத்தான் இப்படியெல்லாம் கதறிக் குளறுகிருர்கள்' என்று அவர்கள் கூறினுர்களாம்.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஆசிய பிரச்னைக்கு இந்தியாவின் நகல் திட்டம்

## டென்மார்க் திட்டத்தில் இஸ்ரேல் விரும்பும் மாற்றம்

நியூயோர்க், ஒக். 27

மேற்குஆசியப் பிரச்னையைத் தீர்க்க, இந்தியா தயாரித்துள்ள நகல் திட்டமொன்றை, ஐ. நா பந்தோபஸ்துசபையின் நிரந்தரமற்ற அங்கத்துவ நாடுகள் பரிசிலனைசெய்து வருகின்றன.

அத்திட்டத்தில், மேற்குஆசியாவுக்கு ஒருவிசேஷ பிரதிநிதியை அனுப்புமாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. அப்பிரதிநிதிக்குரிய சில கடமைகளும் குறிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜூன்மாதம் 4ந் திகதிக்கு முன்னிருந்த நிலைகளுக்குஇஸ்ரேல் துருப்புக்கள் வாபஸ் பெறவேண்டுமென்வும் அத்திட்டத்தில்கோரப் பட்டுள்ளது.

### டென்மார்க்

டென்மார்க்கும் ஒரு திட்டத்தை சமர்ப்பித்துள்ளது. உறுதிப்படுத்தப்பட்ட எல்லைகளுக்குச் சகல துருப்புகளும் வாபஸ்பெறவேண்டுமென அத்திட்டம் சம்பந்தப்பட்ட நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

### இஸ்ரேல்விருப்பம்

இத்திட்டத்தை ஐக்கிய அரபுக்குடியரசு ஏற்கத்தயாராகவுள்ளது. ஆனல், இஸ்ரேல், திட்டத்தின் வாசகத்தில் ஒருமாற்றம் செய்யப்படவேண்டுமெனக்கேட்டுள்ளது.

'உறுதிப்படுத்தப்பட்ட எல்லைகளுக்கு' என்பதை, 'உறுதிப்படுத்தப்பட்டதும், ஒப்புக்கொள்ளப்பட்டதுமான எல்லைகளுக்கு' என மாற்ற, இஸ்ரேல் விரும்புகிறது. அதாவது, சமரசம் எதற்கும் முதற்படியாகப் பேச்சுவார்த்தைகள் நடைபெறவேண்டுமென்ற இஸ்ரேலின் கொள்கையையே இது விளக்குகிறது.

## ஐ.அ.கு. வான பிராந்தியத்தில் இஸ்ரேல் விமானங்கள்

கெயிரோ, ஒக். 27

இதற்கிடையில், கெயிரோவிலிருந்து வெளியான உத்தியோகபூர்வமான அறிவிப்பொன்றின்படி, பல இஸ்ரேலிய விமானங்கள் நேற்று ஐ.அ.கு. விமான பிராந்தியத்தை அத்துமீறிப் பிரவேசித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்விமானங்கள் சூயஸ் பகுதிக்கு மேலாகப் பறந்து வந்தபோது, ஐ. அ. கு. விமான எதிர்ப்புப் பீரங்கிகள், அவற்றை விரட்டி அடித்தன. பின்னர், 2மணித்தியாலம் கழித்து, மீண்டும் அவை திரும்பி வந்தன. கெயிரோவிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீதாக அவை பறந்து சென்றன.

### அந்நிய விமானங்கள்

அடையாளங்காண முடியாத சில அந்நிய விமானங்களும் ஐ. அ. கு. விமான பிராந்தியத்தில் அத்துமீறிப் பறந்துசென்றதாக ஐ.அ.கு. அறிவித்துள்ளது.

இச் செய்திகளை ஐ. நா. பார்வையாளர்களும் ஊர்ஜிதம் செய்துள்ளார்கள்.

கெயிரோவில், ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினின் அவசர செய்தியொன்றை சோவியத்தூதுவர், ஐ.அ.கு. ஜனதிபதி நாஸரிடம் கையளித்தார். அதன் விபரங்கள் வெளியிடப்படவில்லை யானலும், மேற்குஆசியாவில்புதிதாகத்தோன்றியுள்ளநெருக்கடி சம்பந்தப்பட்டதே அது என ஊகிக்கப்படுகிறது

கெயிரோவிலுள்ளஇந்திய தூதுவரும், ஐ.அ.கு. உதவிப் பிரதமரை நேற்றுச்சந்தித்து மேற்கு ஆசிய நிலைமைபற்றி உரையாடினர்.

## பாரிசில் மன்னர் ஹுசெயின்

பாரிஸ், ஒக். 27

தற்போது பிரான்சில்விஜயம் செய்யும் ஜோர்தான் மன்னர் ஹுசெயின், மேற்கு ஆசிய விவகாரத்தில், அரபு நாடுகள் நியாயமான நிலையையே மேற்கொண்டுவருவதாகப் பத்திரிகையாளரிடம் பேசுகையில் கூறினர்.

மேற்குஆசியப் பிரச்னைக்கு சுமுகமான முடிவு காண்பது அரபுநாடுகளைமட்டும்பொறுத்ததல்ல என்றும் அவர் கூறினர்.

## இந்திய முயற்சிக்கு பெல்கிரேடில் பாராட்டு

பெல்கிரேட், ஒக். 27

பெல்கிரேடில. யூகோஸ்லாவியா வெளியுறவு மந்திரி திரு. நிக்கெசிக், மேற்குஆசிய பிரச்னையைத் தீர்க்க இந்தியா எடுத்துவரும் முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

அண்மையில், யூகோஸ்லாவியாவுக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி விஜயம் செய்ததையிட்டு அவர்குறித்துப்பேசுகையில், அது ஒரு வெற்றிகரமான விஜயமென்றும், பிரதமர் இந்திராவும் ஜனதிபதி டிட்டோவும் மேற்குஆசியப் பிரச்னைக்கு ஒரு [illegible] முடிவுக்கான வழி[illegible] ஆராய்ந்ததாகவும்கூறினர்.

## மீன் குரல்!

மாஸ்கோ, ஒக். 27

சோவியத் ஆராய்ச்சிக் கப்பல் 'பெய்தார்' மீன்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்தியுள்ளது. அக்கப்பலைச் சேர்ந்த சோவியத் உயிரியல் நிபுணர்கள், ஆழ்கடல் வாழும் உயிரினங்கள் பலவற்றின் வாழ்க்கை நடத்தை இவை பற்றி ஆராய்ச்சியில் ஈடுபடனர். இந்த ஆராய்ச்சியின்போது, நூற்றுக்கணக்கான மீன்வகைகளின் குரல்களை அவர்கள் வெற்றிகரமாகப் பதிவு செய்துள்ளதாக சோவியத் செய்தித்தாபனம் அறிவித்துள்ளது.

ஒலிகள் மூலம் அறிவிக்கும் நுண்ணிய முறையொன்று 'டொல்பின்' மீன்வகையிடம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒருவகை நண்டின் பேச்சு வகைகளும் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

## மாடி விழுந்து 9 பேர் மரணம்

கான்பூர், ஒக். 27

இங்கிருந்து 40 மைல் தூரத்திலுள்ள பத்தேபூர் பட்டணத்தில், ஊர்வலமொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, மாடி இடிந்துவிழுந்ததன் விளைவாக, மாடியிலிருந்தவர்களில் 9பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களில் 3 பெண்களும், 3 குழந்தைகளும் இருந்தனர்.

வீட்டுச்சொந்தக்காரரும், இனிப்புத் தின்பண்ட வியாபாரியுமானவர், கீழே தமது கடையில் இருந்துகொண்டிருந்தார். அவரும் இடிபாடு விழுந்து கொல்லப்பட்டார். காயமடைந்தவர்களில், மூவரின் நிலை கவலைக்கிடமாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## வெடி விபத்தில் 2 சிறுவர் மரணம்

பூனு, ஒக். 27

போபோடி என்னுமிடத்தில் ஒரு கடையிலிருந்த சீன வெடிகள்வெடித்ததால் அருகில் நின்ற எட்டு வயதுச் சிறுவர்கள் எரிகாயங்களுக்குள்ளாகி மரணமடைந்தனர்.

கடைக்கு முன்னல் இச்சிறுவர்கள் நின்று கொண்டிருக்கையில், யாரோ விஷமிகள், கொளுத்தப்பட்ட ஒரு பட்டாசைக் கடைக்குள் எறிந்ததாகச்சொல்லப்படுகிறது.

## இங்கிலாந்தில் நம்மவர்

லண்டன், ஒக். 27

கொழும்புத் திட்டத்தின் கீழ் உபகாரச்சம்பளம் பெற்று கனடா சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாண கூட்டுறவு காரியாலய பரிசோதகர் திரு, பொ. கோவிந்தசாமி ஆசிய ஆபிரிக்க மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட ஆறுமாத விசேஷகூட்டுறவுபயிற்சியை முடித்துக் கொண்டு இங்கிலாந்து வந்து சேர்ந்துள்ளார். அவர் இங்கு லோபரோ கூட்டுறவுக் [illegible] வார்.

# சீனக் கலவரங்களில் 400 பேர் மாண்டனர்

பீகிங், ஒக். 27

சீனவில் மீண்டும் மா-சே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே பலத்த மோதல் ஏற்பட்டுள்ளது

நேற்று, செக்கியாங் மாகாணத்தில், இரு தரப்பினருக்கும் நடைபெற்ற 3 மணி நேர மோதலில், 400 பேர் கொல்லப்பட்டனர். 2,000 பேர் காயங்களுக்குள்ளாகினர். 3,000 வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

# மொழி வெறிக்கு திரு. கிரி கண்டனம்

மைசூர், ஒக். 27

மொழி வெறியை, இந்திய உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி, மைசூரில் தமக்களிக்கப்பட்ட ஒரு வரவேற்பில் பேசுகையில் கண்டித்துள்ளார்.

பிராந்திய, இன, மொழிப் பற்று வெறியாக மாறிவருவதைத் திரு. கிரி கண்டித்துப் பேசுகையில், இதை வளரவிட்டால், நாடு பிளவுபட்டுச் சிரழிந்துவிடுமென எச்சரித்தார்.

## பம்பாயில் ஜெயப்பிரகாஷ் நாராயணும் கண்டனம்

பம்பாய், ஒக். 27

பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், இதே கருத்துக்களைச் சர்வோதய தலைவரான ஜெயப்பிரகாஷ் நாராயணும் வெளியிட்டுள்ளார்.

இன, மத, பிராந்திய வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தும் அரசியற் தலைவர்களைத் திரு. நாராயண் வெகுவாகக் கண்டித்தார். இத்தகைய மனப்பான்மையை அகற்றிவிட்டு நாட்டின் ஒற்றுமைக்காக ஒருமித்த, தியாக சேவை புரிய இத்தலைவர்கள் முன்வரவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## ஆயுத பரிகரணம் செய்யுமாறு வல்லரசுகளுக்கு வேண்டுகோள்

ஜெனீவா, ஒக். 27

ஜெனீவாவில் நடைபெறும் ஆயுதப் பரிகரண மாநாட்டில், அணு ஆயுதப் பரிகரணம் பற்றிய தமது நோக்கங்களை மட்டும் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதுடன் நில்லாது, சட்ட ரீதியான கடமைப்பாடுகளுக்கு உட்பட்டு நடக்க வல்லரசுகள் முன்வரவேண்டுமென ருமேனியா கேட்டுள்ளது

அணுஆயுத பரிகரணத்தை வல்லரசுகள் துரிதமாக அமுல்நடத்த வேண்டுமெனவும், மாநாட்டில் ருமேனியப் பிரதிநிதி கேட்டுக்கொண்டார்.

## 'வியட்னும் போர் தொடரும்' —ஜோன்சன்

வாஷிங்டன், ஒக். 27

வட வியட்னுமியரின் ஆக்கிரமிப்பு ஒழிந்து. அப்பிரதேசத்தில் சமாதானத்துக்கான அறிகுறிகள் தென்படும் வரையும் அமெரிக்கா தன்னுடைய இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தப் போவதில்லை என்று ஜனதிபதி ஜோன்சன் இங்கு கூறினர்.

வியட்னும் நாட்டுக்குப் போராடச் சென்று மீண்ட இராணுவ வீரரான ஹோவார்டிவி. லீ அவர்களுக்கு வீர விருது அளித்து கௌரவிக்கும் முகமாக வெள்ளை மாளிகையில் புதன் கிழமையன்று ஒரு வைபவம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் உரையாற்றும் போதுதான் ஜனதிபதி மேற்கண்ட கருத்தைக் கூறினர்.

'இதற்கு முன்னரும் சில ஆசிய நாடுகளை ஆக்கிரமித்துவிட எத்தனித்த அந்நியப்படைகளைமுறியடித்து, அங்கே சமாதானம் ஏற்பட அமெரிக்கா பாடுபட்டு வெற்றிகண்டிருக்கிறது இம்முறையும் அயல் நாடுகளை அபகரித்து விட முனையும் ஆக்கிரமிப்பாளர்களை நமது படைகள் முறியடித்தே தீரும். இதே முயற்சியில் நம்மோடு இணைந்து போராடும் ஏனைய நேச நாட்டுப் படைகளும் இத்திட்டத்தில் வெற்றி பெற திட நம்பிக்கை கொண்டுள்ளன.'' இவ்வாறு கூறிய ஜனதிபதி வீரர் லீ க்கு வீரப் பதக்கத்தை அணிவித்தார்.

## 12 அமெரிக்க விமானங்கள் வட வியட்னும் சுட்டு வீழ்த்தியது

ஹனோய், ஒக் 27

நேற்று 12 அமெரிக்க விமானங்களைத் தமது விமான எதிர்ப்புப் பீரங்கிகள் சுட்டு வீழ்த்தியுள்ளதாக வட வியட்னும் வட்டாரங்கள் அறிவித்துள்ளன

இவற்றில் 10 விமானங்கள் ஹனோய்க்கு மேலாகச் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## அரிசிக்கடை தாக்கப்பட்டது

திருச்சூர், ஒக். 27

இங்கிருந்து 10 மைல் தூரத்திலுள்ள ஓரிடத்தில், அரிசிக்கூப்பன்கடைஒன்றை ஒரு கோஷ்டி தாக்கியதன் விளைவாக, 10 பேர் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் மாவட்ட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். மூவரின் நிலை மோசமாகவுள்ளது.

அரிசி வாங்க வந்தவர்கள் மீது கற்களும், வேறு பொருள்களும்வீசப்பட்டன பொலிசார் வந்தடைய முன்னர் கடையிலுள்ள பணத்துடன், வன்முறைக் கும்பல் ஓடிச்சென்றுவிடடது.

## பூகம்பத்துக்கு இருவர் பலி

தாய்பெய். ஒக். 27

போர்மோஸாவின் கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட பலமான பூகம்பமொன்றில், இருவர் மரணமாகினர் ஒருவருக்குக் காயமேற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதியழகன் ரோம் செல்வார்

சென்னை, ஒக். 27

அடுத்தமாதம் 4-ந் திகதி, ரோமில் நடைபெறவிருக்கும் சர்வதேச உணவு, விவசாய மாநாட்டில் தமிழக உணவு மந்திரி திரு. கே. ஏ. மதியழகன் கலந்து கொள்வார்-


## "ரா ஜே"

உங்கள் சொகுசுக்கேற்ற

சாமான்கள்

- ஸ்பிரிங் கட்டில் பிரேம்கள், எல்லா அளவிலும்



- டிலக்ஸ் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- டிலேட் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- ஆஸ்பத்திரி கட்டில்கள்
- டாக்டர் பரிசோதனை கட்டில்கள்
- ஆஸ்பத்திரி தூங்கு கட்டில்கள்
- பஞ்சு - தும்புமெத்தைகள்
- ஸ்பிரிங் மெத்தைகள்
- குழந்தை தொட்டில்
- மெத்தை ஸ்பிரிங்குகள்
- திரைகள்
- சுப்பர் லக்ஸ் கட்டில்கள்

முதலியன

மேற்கொண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஏகவிநியோகஸ்தர்கள்

த பர்மா டீக் ட்ரேடிங் கம்பனி, லிமிட்டெட்,

62, புளுமெண்டால் ரோட்,

கொழும்பு-13.

தொலைபேசி: 2233/34


## போலி மருந்துகள்?

யாழ்ப்பாணம், சனி

போலிலேபல்கள் ஒட்டப்பட்ட மருந்துகள் வடபகுதியின் சில பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகத் தெரியவருகிறது.

அநேகமாக கிராமப்புறங்களிலேயே இவ்வித போலி மருந்து விற்பனை நடைபெற்றுவருவதாகத் தெரியவந்துள்ளது. நாகரிகமாக உடையணிந்த சிலர் தாம் மருந்து விநியோகிக்கும் கம்பனிகளின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டு போலி மருந்துகளை இப்பகுதிகளிலுள்ள மருந்துக் கடைகளில் விற்பனைசெய்து வருவதாகத் தகவல்கள் பொலிஸாருக்குக்கிடைத்துள்ளதாம்.

இதுசம்பந்தமாக வடபகுதி பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். இவ்வித மோசடிக்காரர்கள் பற்றிய தகவல்களை அருகாமையிலிருக்கும் பொலிஸ் நிலையங்களுக்கு உடனுக்குடன் அறிவிக்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுள்ளனர். (ந. நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 28-10-67**

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 பாட்டு — என், கந்தையா, 6-45 கருத்தரங்கம், 7-15 பாவளம், 7-30 குங்குமம்—செல்வி ச. நாதன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விவாத மேடை, 10-00 நேயர் விருப்பம்.

## பாலாதம்பு யாழ். வருகிறார்

குரும்பசிட்டி, வெள்ளி

புரட்சிவாத சமசமாஜக் கட்சிப் பிரமுகரும் தொழிற்சங்கவாதியுமான திரு. பாலதம்பு அடுத்த மாதம் 15-ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கின்றார். சுமார் மூன்று தினங்கள் இங்கு தங்கியிருந்து பல்வேறு இடங்களிலும் அரசியல் வகுப்புக்கள் நடாத்தி இன்றைய அரசியல் நிலை பற்றி விளக்கம் கொடுப்பதுடன் தமது அமெரிக்க நாட்டு அனுபவங்கள் பற்றியும் விரிவுரை நடாத்துவார் எனத் தெரிகிறது.

## சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை

புலோலி, வெள்ளி

சுகாதாரப் பகுதியினர் சென்றவாரம் புலோலிகிராமச்சபையில் ஏராளமானமக்களை [எக்ஸ்றே] படமெடுத்தார்கள். வடமராட்சிப் பகுதியில் 14 வயதுக்கு மேற்பட்ட எல்லோரையும் சுகாதாரப் பகுதியினர் எக்ஸ்ரே படமெடுத்து வருகின்றார்கள் காசநோய்இப்பகுதியில் பரவிவருவதாகச் சந்தேகிக்கப்படுவதைத் தொடர்ந்தே சுகாதாரப்பகுதியினர் இவ்வித நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## பதவி உயர்வும் இடமாற்றமும்

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி ஆசிரியர்திரு. பி சின்னத்தம்பி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

நெல்லியடி மத்தியமகா வித்தியாலயஆசிரியர்திரு. எஸ். நடராசா கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

திருமதி நாகம்மாவீரகத்தி கரவெட்டி சரஸ்வதி வித்தியாசாலை தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்,

## நிலம் கிடைத்தது

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம் பாணவெட்டி அரசினர் வைத்தியசாலைக்கு வேண்டிய கட்டிடங்கள் மற்றும் சகல வசதிகளை அமைப்பதற்கு வைத்தியசாலைக்கு அருகேயுள்ள நிலம் கிடைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

## கோட்டையில் இந்து கலாச்சார நிலையம்

கொழும்பு, வெள்ளி

இந்துமக்களுக்கு கொழும்பு கோட்டையில் கலாச்சார நிலையமொன்றை நிறுவவேண்டுமென அரசாங்கத்தை இந்துமாமன்றம் நீண்ட காலமாகக் கோரி வந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் கோட்டையில்இதற்கெனஒருநிலத்தை வழங்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

## தொழிலாளர் விடுதி

அச்சுவேலி, வெள்ளி

அச்சுவேலி கிராமசபையினரால் ரூபா பத்தாயிரம் செலவில் அமைக்கப்பட்ட தொழிலாளர் விடுதி சட்டிடத்தில் அச்சுவேலி கிராமசுத்தித் தொழிலாளர்கள் அண்மையில் குடிபுகுந்தனர்.


## விளம்பரம்

### ஆயுள்வேத வைத்தியசாலை

**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்**

சகலவிதமான பாம்பு கடிகளுக்கும் மாந்திரிகம், மருந்து முதலியதால் 24 மணித்தியாலத்தில் மாற்றிக்கொடுக்கப்படும்.

அன்றியும், சிலந்திக்கடி, எலிகடி, தொண்டையில் வரும் களகண்டம், கண்டமாலை, கரப்பன், சகல கட்டுகளுக்கும், வாதம் முதலியதற்கும் சொற்பநாட்களில் பத்தியமின்றி சுலபமாகச் சிகிட்சை செய்யப்படும்.

**பேன் நிவாரணி**

உங்களுக்குப் பேன் இருந்தால், ஒரு பேன் நிவாரணி 1-00 ரூபா கொடுத்து, பாவித்தால் ஒரே இரவில் 12 மணித்தியாலத்தில் பேன் அற்றுப்போம்.

**மனோன்மணி கிரந்தி எண்ணெய்**

1700 ஆண்டுமுதல் நான்கு தலைமுறையாகப் பிரசித்திபெற்ற கிரந்தி எண்ணெய் சகல மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

மேற்கூறிய மருந்துகள் விற்பதற்கு, திறமையுள்ள 2 பெண்மணிகள் தேவை. விண்ணப்பிக்கவும்:

டாக்டர் வ. சுப்பிரமணியம்

ஆயுள்வேத வைத்தியசாலை

கல்வியங்காடு, யாழ்ப்பாணம்,



அனுபவமுள்ள வைத்தியரின் மேற்பார்வையில்

## சித்த வைத்திய மருந்துகள்
## ஆயுர்வேத மருந்துகள்
## மருந்துச் சரக்குகள்

கிடைக்குமிடம்:

**சுந்தரம் பிறதர்ஸ்**

**மருந்துக்கடை**

[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாண



# தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு

உங்களுக்குத் தேவையான சகல விதமான புடவைத் தினிசுகளும் கண்கவர்கலர்களில்

டெர்லின், நைலோன், நொண்ணயன், டெக்ரோன் சேட்வகைகளும்

மற்றும்

லங்கா மணிப்புரி, கைத்தறி சேலைகளும் எங்களிடம் ஏராளமாக கையிருப்பிலுண்டு!

உங்கள் தீபாவளித் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள இது ஓர் அரிய சந்தர்ப்பம்!

பயன்படுத்திக்கொள்ளத் தவறாதீர்கள்!

# யாழ்ப்பாண சீப்சைட்

பிரதான வீதி, (லங்கா சலுசால ஏக விநியோகஸ்தர்கள்) பருத்தித்துறை.

தலைமைக்காரியாலயம்:
சீப்சைட்
யாழ்ப்பாணம்.
போன்: 479

கிளைஸ்தானங்கள்:
சீப்சைட்
கிளிநொச்சி,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

மண்டைதீவு வெள்ளி

மண்டைதீவு மதிஒளி சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. ச. குணராசாவின் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: இ. கந்தையா, உபதலைவர்: செ. அருமைநாயகம், செயலாளர்; ந. வரதராசன், உபசெயலாளர்: பொ. சபாநாயகம், தனாதிகாரி: ச. குணராசா, கணக்குப்பரிசோதகர்: லிங்கப்பிள்ளை. ஐந்து பேர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## மாணவா கஷ்டம்

இமையாணன், வெள்ளி

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரிக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லாமையால் இவர்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியையே உபயோகித்து வருவதாகத் தெரிகிறது. அத்துடன் நூல் நிலையத்திற்கான இடவசதியும் இப்பாடசாலையில் இல்லையெனவும், விஞ்ஞான கூடத்திலும் பல வசதியீனங்கள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

## தற்கொலை

புலோலி, வெள்ளி

கரவெட்டி கிழக்கில் வசிக்கும் சின்னையா செல்வராசா [வயது 28] என்னும் இளைஞர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இறந்தவரின் சகோதரியான சின்னப்பிள்ளை மரண விசாரணையின் போது கூறியதாவது:-

''நீங்கள் எல்லோரும் நல்ல சுகமாக வாழுங்கள் நான் இறக்கப் போகிறேன். என்று கூறிய எனது சகோதரர் சிறிது நேரத்தில் கையில் நச்சுத்திராவகப் போத்தலுடன் நிற்பதைக் கண்டு, ஓடிச்சென்று பறித்தேன். அப்போது அவர் கீழே விழுந்துவிட்டார். உடனே கார் மூலம் அவரை மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். அவர் அங்கு மரணமானார்.''

இறந்தவருக்கு ஒரு குழந்தை உண்டென்டும், சில வருடங்களாக குடும்பத்தில் ஒற்றுமையில்லாமல் இருந்து இறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்தான் ஒற்றுமையானார் என்றும் மரணவிசாரணையில் தெரியவந்தது.

பருத்தித்துறைப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி ஆர். எஸ். இராமநாதன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.


மனோகரா — ராணி

யாழ்ப்பாணம்

30-10-67 திகதி முதல்

ஜெய்சங்கர், ஆதித்தன், தங்கவேலு, ''வெண்ணிறஆடை'' மூர்த்தி, வாணிஸ்ரீ, விஜயலலிதா, பண்டரிபாய் பேபி கௌசல்யா. குமாரி ராதா நடித்த

காதல் படுத்தும் பாடு

பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன்
பி. சுசீலா, எஸ். ஜானகி.

3-வது குதூகல வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ணா [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு

ராஜ் [நீர்கொழும்பு]

மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


## விளம்பரம்

### அறிவித்தல்

**தத்துவ அதிகாரம் வாபஸ்**

இத்தால் இலங்கை அக்சாங்கத்துக்கும் பொதுமரகளுக்கும்தெரிவிப்பது என்னவென்றால் - மன்னார்பிரசித்த நொத்தாரிஸ் எஸ். ஏ. எம். நவரத்தினத்தால் ஒப்பமிடப்பட்டு மலேசியா, பட்டுகஜாவைச் சேர்ந்தவரும் தற்சமயம் அவுஸ்திரேலியா, மெல்போர்ண், 104, போவன் கிறசண்டைச்சேர்ந்தவருமான கந்தையாபரமநாதனால் காரைநகர், களபூமியிலுள்ள டக்டர் அம்பலவாணப்பிள்ளை வைத்திலிங்கத்துக்கு அளிக்கப்பட்ட தத்துவம் மெல்போர்ண் பிரசித்த நொத்தாரிஸ் ஜோன் வாலெஸ் போல் என்பவரால் ஒப்பமிடப்பட்டு 1967, ஒகஸ்ட் 31-ம் திகதியிடப்பட்ட வாபஸ் கடிதத்தினால் திருப்பி எடுக்கப்பட்டுள்ளது.

பரமு சிதம்பரப்பிள்ளை,
கே. பரமநாதனின்
தற்போதைய அற்ரோர்ணி.
302

### அறிவித்தல்

கோப்பாய் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை (நாவலர் பாடசாலை) பழைய மாணவர் சங்கத்தாரால் அரசினருக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகள்:-

(I) பொதுமக்களின் பணத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தைத் திருப்பி எடுத்தல்.

(II) அரசாங்கப்பணத்தில் கட்டிய மலசலகூடத்தை எடுத்தல்.

(III) பொதுமக்கள்பணத்தில் கட்டிய கட்டிடத்துக்கு வாடை கொடுக்கக்கூடாது என்றும்.

(IV) பாடசாலை பாவித்த சிதம்பர சொத்துக் காணி திருப்பி எடுத்தல். ஆகிய கோரிக்கையையிட்டு அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதபடியால் இன்று நடைபெற இருந்த சத்தியாக்கிரகம், பாடசாலை அதிபரும், வலிகிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவரும், தலையிட்டு ஒத்திவைக்குமாறு கேட்டபடியால், ஒத்திவைக்கப்பட்டது.

பழைய மாணவர் சங்கம்,
303 காரியதரிசி.

## மக்கள் கஷ்டம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவில் உள்ள சில கடைகளில் உப உணவுப் பொருட்கள் சரிவர விநியோகம் செய்யப்படுவதில்லை எனப் புகார் கூறப்படுகிறது. நெஸ்பிறே, தீப்பெட்டி, ரின் மீன்வகைகள் மக்களுக்குக் கிடைப்பது கஷ்டமானதாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.


நியூ காலிங்கன் [இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர் நடித்த
நாம் மூவர்

மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00, 9-45 p. m.
Agent 3 S 3
PASSPORT to HELL
Technicolor

REGAL JAFFNA
Daily at
4 45 7-00 9-45 p. m.
Gordon Scott
in
Lion of St. Mark
Eastman Color
Action Picture


## இன்று வருவர்

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியிற் கள்ளக் கடத்தலைத் தடுப்பது சம்பந்தமாக ஆராய்ந்து நடவடிக்கையெடுக்கும் பொருட்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபய குணவர்த்தனவும், இலங்கை இராணுவத் தளபதி திரு. சேபால அட்டிகலையும் இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்றார்கள்.

[நூ. நி.]

## பாராட்டு

அச்சுவேலி, வெள்ளி

காரைநகர் மணற்காடு அம்மன் கோவிலில் உபன்னியாசங்கள் நிகழ்த்திய பிரமஸ்ரீ கி. சுப்பிரமணிய சர்மாவிற்கு அண்மையில் ஒரு பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது.

மணற்காடு அந்தண சமூகத்தினரால் மேற்படி பாராட்டுரை வழங்கப்பட்டது.

## மண்டைதீவு கி. ச. உபதலைவர்

ஊர்காவற்றுறை, வெள்ளி

மண்டைதீவு கிராமசபையின் புதிய உபதலைவராக திரு. நடராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மண்டைதீவு கிராமசபையின் நீண்டகால அங்கத்தவராக இருந்து வருகிறார்.

## பம்பாய் கொலை

### பொலிசாருக்கு உதவிய சலவைத் தொழிற்சாலை அடையாளங்கள்

பம்பாய், ஒக். 27

பம்பாயில் ஒரே வீட்டில் நால்வர் கொலைசெய்யப்பட்டதும், இது சம்பந்தமாக இரு நபர்கள் கைது செய்யப்பட்டதும் வாசகர்கள் அறிந்ததே.

இவ்விருவர்களில் ஒருவர், கொலைசெய்யப்பட்ட வர்த்தகர் சூன்வாலாவின் கீழ் முன்னர் வேலைசெய்தவராம். மற்றவர் சூன்வாலாவின் மைத்துனனும், இராணுவத்திலிருந்து விலகி ஓடியவருமாவார்.

கொலை நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சில உடைகளில் காணப்பட்ட சலவைத் தொழிற்சாலை அடையாளங்களைக் கொண்டே பொலிசார் இவ்விருவரையும் கைது செய்யமுடிந்தது.

## ஸ்பெயினில் மாணவர்கலவரம்

மாட்ரிட், ஒக். 27

ஸ்பெயின் அரசாங்கத்தின் பொதுவான கொள்கைகளை எதிர்த்து, ஆயிரக்கணக்கான மாணவர்கள், நேற்று ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட்டில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். கல்வீச்சிலும் அவர்கள் இறங்கினர்.

பொலிஸார், மாணவ ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீடும் காணியும்

மிருசுவிலில் புகையிரத நிலையம், தபால் நிலையம் ஆகியவற்றுக்கு அண்மையில் மா, பலா, தென்னைகள் அடங்கிய, கல்வீட்டுடன் கூடிய ஒன்பது பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் தொடர்புகொள்க: அந்தோனிப்பிள்ளை நல்லையா ''சந்திராபவனம்'', வயற்கரை ஒழுங்கை, மிருசுவில். 2281

காணி

கச்சேரி நல்லூர் வீதியில் சகல வசதியும் அடங்கிய 55-ம் இலக்க வீடும் காணியும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு ச. செல்லத்துரை இல. 3. கற்பக விநாயகர் வீதி நல்லூர், 2284

**Wanted Immediately**

Farm School trained young man as house master for Nuffield School for the Deaf and Blind, Kaitadi. Apply Principal. 2282

## நெல்லியடிக்கு நவீன சந்தை

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி பட்டினசபை விசேஷ ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகரின் நேரடிக் கண்காணிப்பில் உருவாகி வரும் நவீன சந்தைப் புதிய கட்டிடங்கள் விரைவில் திறந்து வைக்கப்படுமென்று அறியப்படுகிறது. தனிப்பட்ட கடைக்காரர்களுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்கான புதிய சந்தைக் கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்டு விட்டது. மேலும் புதிய கட்டடம் நிறுவுவதற்கான வேலைகள் துரிதமாகச் செயற்பட்டு வருகின்றன.

## உதைபந்தாட்டக் கழக உறுப்பினர்

ஊர்காவற்றுறை, வெள்ளி

தீவுப்பகுதி உதைபந்தாட்டக் கழகத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு ஏ. எல். தம்பிஐயா, திரு. வி. நவரத்தினம் எம். பி., திரு. இ. மாணிக்கம், திரு. ஏ. எம். சூசைப்பிள்ளை, தலைவர், வண பிதா ஸ்னிஸ்லோஸ் காரியதரிசி: டாக்டர் ஏ. வி. துரைசிங்கம், தனாதிகாரி: திரு. வி. சிவபாதம்.

## வெயில் மறைப்பு விழுந்து இருவர் மரணம்

சென்னை, ஒக். 27

ஏழுகிணறு பகுதியில், ஆனைக்காரன் தெருவில், வெயிலைத்தடுக்கும் மறைப்பொன்று இடிந்து விழுந்ததன் விளைவாக இரு கட்டிடக் கொத்து வேலைக்காரர் உயிரிழந்தனர். தச்சர் ஒருவர் காயமடைந்தார்.


விரையுங்கள்

உங்கள் தீபாவளித்தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள
உங்களுக்குத்தேவையான சகலவிதமான
ஜவுளித் தினுசுகளும்
உயர்ந்தரக ரெர்லின், நொண்ணயன்,
கொட்டன் சேட்டுகளும், றெடிமேட் உடுப்புகளும்,
C. W. E. கூப்பன் பிடவைகளும்
மிகவும் மலிவான விலைகளில்
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்

இன்றே விஜயஞ்செய்யுங்கள்:

கணேசானந்தாஸ்
ஜவுளி மாளிகை
முட்டாசுக்கடைச் சந்தி
208, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

# சாட்சிகளை பயமுறுத்துகிருர்களாம்

## புனிதவதி கொலை வழக்கில் பொலிசாரின் புகார்

குரும்பசிட்டி, வெள்ளி

தொல்புரம் புனிதவதி கொலை வழக்கில் 2-ம் எதிரி டி. சுவாமிநாதன் திடீரென சுகவீனமுற்றிருப்பதால் விசாரணை நவம்பர் 1-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2-ம் எதிரி பி. சுவாமிநாதன் திடீரென சுகவீனமுற்றிருப்பதால் விசாரணையை மற்றெரு திகதிக்கு ஒத்திவைக்க எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் கோரினர். நீதி மன்றத்தில் சமூகமளித்திருந்த வட்டுக்கோட்டை மாவட்ட உதவி வைத்திய அதிகாரி திரு. எஸ். குலத்துங்கம் எதிரி சுவாமிநாதனை பரிசோதனை செய்த பின்னர் பூரண வைத்திய பரிசோதனை செய்யப்படுவதற்கு ஆஸ்பத்திரிக்கு எதிரியை அனுப்பி வைக்கும்படி மாஜிஸ்ரேட் தெரிவித்தார்.

இக் கொலை வழக்கில் சாட்சிகள் பயமுறுத்தப்படுவதாகவும் வீண் தொந்தரவுகளுக்கு உள்ளாக்கப்படுவதாகவும் சங்கானைப் பொலிஸார் நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். இதனையடுத்து நீதிபதி ''இப்படியான காரியங்களில் ஈடுபடுபவர்கள் பலத்த தண்டனைக்கு ஆளாகுவர் என்றும் நீதிமன்ற விசாரணைக்கு இடைஞ்சல் விளைவிக்க எவரும் முன்வரக் கூடாது'' எனவும் தெரிவித்தார்.

தொல்புரத்தைச் சேர்ந்த வயது 45 என்பவரைக் கொலை செய்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த ஏ. கிருஷ்ணபிள்ளை, பி. சுவாமிநாதன், ரி. திருநாவுக்கரசு, என். தவராசா ரி. ஜெயச்சந்திரன், டி. விநாயகம் ஆகிய அறுவருக்கு எதிராக குற்றஞ்சாட்டி சங்கானைப் பொலிஸார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

இன்றைய விசாரணையை பார்ப்பதற்கு நீதிமன்றத்தில் கூடியிருந்த ஜனத்திரள் ஏமாற்றத்துடன் திரும்பியது.

### இன்று

சிதம்பரத்திலுள்ள நாவலர்பெருமானுடைய சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்க சைவ அபிமானிகளுடைய பொதுக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆச்சிரம மண்டபத்தில் இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

### சமாதானமாக சென்றனர்

சங்கானை, வெள்ளி

தங்கள் எல்லைப் பக்கத்தால் வரக்கூடாதென்று பயமுறுத்தியதாகச்செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சங்கானைப் பொலிசார் ஒருவரைக் கைதுசெய்தனர்

சமாதானக் குழுவைச் சேர்ந்த சங்கானைப்பட்டின சபை உறுப்பினர் கணேசு என்பவரும், உப தலைவர் ராசையாவும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று இருவரையும் சமாதானமாகச் செல்லும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் இருவரும் சமாதானமாகச் சென்றனர்.

சமாதானக் குழு அமைக்கப்பட்டபின்பு முதன்முறையாக சமாதானமாகத் தீர்த்துவைக்கப்பட்ட முதல் சம்பவம் இது என்பதுகுறிப்பிடத்தக்கது.

### சென்றல் சென்.ஜோன்ஸ் மோதல்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணய் மத்திய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 1-ம் 2-ம் பிரிவுகளுக்கிடையேயான பெரும் உதைபந்தாட்ட மோதல்களில் முதலாம் பிரிவுப் போட்டியில்சென். ஜோன்ஸ் 4—1 கோல்களால் வென்றது. 2-ம் பிரிவுப் போட்டியில் இருசாராரும் தலா ஒவ்வொரு கோல்கள் போட்டு வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தனர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சுறு சுறுசுறுப்பும் விறுவிறுப்பானதுமான இப்போட்டிகளுக்கு முறையே திரு. யோகராசாவும், திரு. மாட்டீனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். [வி. நி.]

### 40 தபால் பைகள்

யாழ்ப்பாணம், சனி

தபால் இலாகாவுக்குச் சொந்தமான 40 தபால் வெற்றுப் பைகளை தபால் இலாகாவினர் கைப்பற்றினர். இச்சம்பவம் யாழ்ப்பாணத்திலுள்ள 'லக்சல' விற்பனை நிலயத்தில் நடைபெற்றது.

தபால் இலாகா இன்ஸ்பெக்டர் திரு. பி சதாசிவம், பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. சிறிவர்தனவின் உதவியுடன் நேற்று இத்தபால் பைகளை இங்குகைப்பற்றினர் இதுசம்பந்தமாக குருநகரைச் சேர்ந்த பெண்ணொருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கைப்பற்றப்பட்ட தபால் பைகளை சம்பந்தப்பட்ட பெண் 'லக்சல' விற்பனை நிலயத்து திறப்பு விழா வைபவததுக்கு வாடகைக்குக் கொடுத்ததாவும் தெரியவந்துள்ளது. இவ்வாரத்தில் இது இரண்டாவது சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது. [ந. நி.]

### எஸ். ஜே. வி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யமாகப் பேச முயற்சிகள் எடுத்தனர் ஆனல் அதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தமிழரசுத் தலைவர்கள் தேசியமய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகதாசாவைச் சந்தித்துப் பேசியிருக்கிருர்கள்.

திருக்கோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதைத் ஆட்சேபித்து திரு. செல்வநாயகத்துக்கு 100 தந்திச் செய்திகள் கிடைத்தன.

சத்தியாக்கிரகம் செய்தி அச்சுக்குப் போகும்வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

### யார் அந்த...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நாயகம் நேற்று விசாரணை நடத்தினர். மரணமானவர் 6 வருடங்களுக்கு முன்னர் மனைவியை விட்டுப் பிரிந்து இப்போது தனிமையாக வாழ்ந்து வருவதாக, இறந்தவரை அடையாளம் காட்டிய பேராதனை விவசாய இலாகாவைச் சேர்ந்த ரணதுங்கா என்பவர் மரண விசாரணையில்தெரிவித்தார்.

மரணமானவரை அவரது நண்பர்கள் நேற்று கரையூர் மயானத்தில் அடக்கம் செய்தார்கள். இறந்தவரை பிரேத பரிசோதனை செய்த டாக்டர் சுப்பிரமணியம், அவர் இறந்ததற்கான காரணங்களைத் தெரிவிக்க முடியாதிருப்பதாகத் தெரிவித்தார், இறந்தவரது உடல் உள்ளுறுப்புகள் பிரேத பரிசோதனை செய்யப்படுவதற்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பொலிஸார்தொடர்ந்து விசாரணை செய்கின்றனர். [ந நி]

## எதிர்கட்சித் தலைவர்கள் ரஷ்யா போவர்

கொழும்பு, வெள்ளி

அடுத்தமாதம் சோவியத் ரஷ்யாவில் நடக்கவிருக்கும் 50-வது ஆண்டு அக்டோபர் புரட்சி விழாவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்துகொள்வார்கள். ரஷ்யா இவர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பியுள்ளது.

எதிர்க் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. விக்கிரமசிங்கா, கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் திரு. பீற்றர் கெனமன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. ரி. பி. சுபசிங்கா, மைத்திரிபால சேனநாயகா, லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியோர்கள் அக்டோபர் புரட்சி விழாவில் கலந்துகொள்வாரெனத் தெரிகிறது. தொழிற்சங்க பிரமுகர்கள் சிலரும் இவ்விழாவில் கலந்துகொள்வார்கள்.

### பாதயாத்திரை

யாழ்ப்பாணம், சனி

நல்லூர்பஜனைச் சபையினர் அடுத்தமாதம் 3-ந் திகதி நுணுவில் ஸ்ரீசிவபூதராயர் ஆலயத்துக்கு சிவநாமபாத யாத்திரை ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

### பயிற்சி வகுப்பு

அச்சுவேலி, வெள்ளி

அரசாங்க பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப் பொன்று அண்மையில தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது.

### சுவீப் முடிவு

நேற்றுவெளியான தேசிய லொத்தர்சபையின் 165வது சுவீப் முடிவுகளின் 3-வது பரிசுக்குரிய டிக்கெட் இலக்கம் 36 G 0940 என்று இருக்கவேண்டும்.

## "புதிய சந்தைக்கு இன்னெரு அடிக்கல்லா?

### உள்ளூராட்சி மந்திரியிடம் கேட்கிருர்கள்

யாழ்ப்பாணம், சனி

''புதிய சந்தைக்கான அடிக்கல்லை பிரதமர் நாட்டுவார் என்றெரு செய்தி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்தது. ஆனல் ஏற்கனவே 21-1-62 அப்போது மேயராகவிருந்த திரு. அல்பிரட் துரையப்பா புதிய சந்தைக்கான அடிக்கல்லை நாட்டிவிட்டார். மாநகரசபை அங்கத்தவர்கள், பொது மக்கள், மற்றும் பல பிரமுகர்களும் அந்த விழாவின் போது சமூகமளித்திருந்தனர். ஒரு கட்டடத்துக்கு ஒருமுறை அடிக்கல் நாட்டினல் போதும் என்பது தெரியும். ஆகையால் இதனல் இன்னெரு அடிக்கல் நாட்ட வேண்டியளவுக்கு அவசியமேயில்லை''

உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கு ஐவர் கையெழுத்திட்டு எழுதியுள்ள கடிதமென்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

திருவாளர்கள் பி. எம். ஜோன், ஏ. நடராசா, கே. எஸ். நடராசா, என். தேவபாலசுந்தரம் ஆகியோர் இக் கடிதத்தை மந்திரிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

புதிய சந்தைக்கு இன்னெரு அடிக்கல்லை நாட்டினல் அது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கும், வரியிறுப்பாளர்களுக்கும் எதிராகச் செய்யப்படும் ஒரு செயலாகும் என்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விற்பனைக்கு

கார்

சொந்தப் பாவிப்பிலுள்ள இல. EL 5800 கொண்ட வக்ஸ்சோல் கார் விற்பனைக்குண்டு. முழு விபரங்களுக்கும் தொடர்புகொள்ளவும்- 10, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 2286

## டாக்டரை ஏமாற்றியதாக அரசாங்க ஊழியர் கைது

யாழ்ப்பாணம், சனி

தனது பெயரில் இன்னெருவரை டாக்டரிடம்பரிசோதனைக்கு அனுப்பிவைத்ததாகச் சந்தேகிக்கப்பட்ட அரசாங்க ஊழியரொருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். இச்சம்பவப் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள புகையிரத நிலையமொன்றின் 'டிக்கட் ஏஜண்ட்' ஒருவரே சந்தேகநபரெனத் தெரியவந்துள்ளது. 60 வயதையடைந்த இவர் பதவியிலிருந்து ஓய்வு பெறவிரும்பாமல் இருக்க, டாக்டரிடம் கண் பரிசோதனை செய்யவேண்டியிருந்ததால், வேறொருவரை தனது பெயரில் டாக்டரிடம் பரிசோதனைக்குஅனுப்பிவைத்த போதே இந்த 'ஏமாற்று வித்தை' அங்கு வெளிப்பட்டதாகத் தெரிகின்றது.

கைதுசெய்யப்பட்ட சம்பந்தப்பட்ட புகையிரத நிலைய ஊழியர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டார். பொலிஸார்புலன் விசாரணை செய்துவருகின்றனர். [ந. நி.]

தீபாவளிப் பண்டிகைக்காக



S. R. S.

ஜவுளி மாளிகையில்

* லங்கா சலுசால புடவைகள் * கைத்தறிப் புடவைகள்

* லங்காமில் உற்பத்தி தினுசுகள்

மற்றும்

* உள்ளூர் தயாரிப்பிலான பட்டு, பருத்தி புடவைகள்

யாவும் மிகவும் மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் தீபாவளித் தேவைகளுக்கு

எம்மிடம் விஜயஞ் செய்யுங்கள்!

எஸ். ஆர். செல்லத்துரை

(லங்கா சலுசாலவின் அங்கீகாரம்பெற்ற மொத்த, சில்லறை விற்பனையாளர்)

216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 296

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org